# திருமண முன்தயாரிப்பு

## ( இரு வீட்டாரும் படித்து அறியவும் )

### அறிமுகம்

மங்களகரமான திருமணத்தை சம்பிரதாயப்படியும், தர்மத்தின் அடிப்படையிலும் மிகவும் தரமாக நடத்திட தேவையான முன் ஏற்பாடுகளை இதில் விளக்கியுள்ளேன். இதன் மூலம் திருமண நிகழ்ச்சியை திட்டமிட்டு செய்து வெற்றிகரமாக நடத்திடலாம்

### மாயிலை

முந்திய நாளே போதுமான அளவு மாயிலையை கழுவி சுத்தம் செய்து வைக்கவும்

### அரசாணைக்கால்

அரசன் கிளை (5 அடி) –1
ஆலம் கிளை (5 அடி) –1
இளம் மூங்கில் (5 அடி) –1
கல்யாண முருக்கன் இலை
அத்தி இலை
கூடுமானவரை முயற்சி செய்து கொண்டு வரவும் இளம் தளிர் மூங்கில் கொம்பு மிக முக்கியமானது

### பூக்கள்

புரோகிதரின் தேவைக்கு கதம்பம் 20 முழம் தேவை.
உதிரி ரோஜா இதழ்கள் (பூஜை மற்றும் அட்சதையில் சேர்க்க)

### அருகன் புல் - துளசி

அருகன் புல் – எண்ணெய் நலுங்கு வைக்க, பிள்ளையார் பூஜைக்கு தேவை
துளசி – சிறிதளவு

### மணமாலை (துலுக்க சாமந்தியை தவிர்க்கவும்)

| | |
|---|---|
| முகூர்த்த மாலை 1 + 1 | மாற்று மாலை 1 + 1 |
| (குறுக்கு) ஆரம் 2 + 2 | கை செண்டு 1 + 1 |
| ஜடை 1 | மல்லி / கதம்பம் சரம் 1 சென்டு |



### முகூர்த்த துணி

மாப்பிள்ளைக்கு பஞ்சகச்சம் கட்டும் பழக்கும் இருப்பின் 10 X 6 அளவு வேஷ்டி துணி வாங்கவும்.
8 முழம் வேஷ்டியில் பஞ்சகச்சம் சரி வர கட்ட இயலாது.
தலைப்பாகை துணி மற்றும் மேல் துண்டு வாங்கவும்.
சிவப்பு கைத்துணி 3
சிவப்பு ரவிக்கை துணி (கலசம்) 1
4 முழம் துண்டு [ மடியில் முகூர்த்த தேங்காய் கட்டிட ]

### மணப்பாய் / துணி

கல்யாண மணை மேல் போட புதிய பாய் மற்றும் 8 முழம் வேஷ்டி தேவை

### சம்மந்தி துணி (ஒரு சிலர்)

சம்மந்திக்கு பாத பூஜை புடவை, வேஷ்டி துணியை முன்கூட்டி தந்து கட்டி கொள்ளச் சொல்லவும். வேறு ஏற்பாடு இருப்பின் புரோகிதர் வசம் முன்கூட்டியே சொல்லவும்.

### பழைய துணி

பூஜை செய்யும் இடத்தில் தரையில் சிந்தும் எண்ணெய், தண்ணீர் ஆகியவை சுத்தம் செய்ய பழைய துணி தேவை.

### பூஜை பொருட்கள்

தங்களின் சம்பிரதாயத்திற்கு ஏற்ப தேவையான பூஜை பொருட்கள், தேவையான அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பட்டியில் உள்ள பொருட்கள் அனைத்தினையும் வாங்குவது நல்லது.

### பூஜை பாத்திரங்கள்

கலச சொம்பு, மணி தட்டு, பஞ்ச பாத்திரம், அம்மி குழவி, கல்யாண மனை, புரேகிதர் மனை ஆகியவற்றை மண்டப அதிகாரியிடம் முந்திய நாளே கேட்டு வாங்கவும்.

### இடத்தூய்மை

எண்ணெய் நலுங்கு வைக்கும் முன் அதிகாலை 3 மணி அளவில் திருமண மணவறையை சுத்தம் செய்து கோலம் போட சொல்லவும்

## பசுவின் பொருட்கள்

பசும் பால் 1/2 லிட்டர்(அரசாணைக்கால் / பாத பூஜை / கன்னிகாதானம்)
பசும் தயிர் 200 மில்லி ( பாத பூஜை/அரசாணைக்கால்)
பசும் நெய் 100 கிராம்
கோமியம், சானம் சிறிதளவு
விரட்டி 21 (மணப் பொங்கல்)

## முகூர்த்த தேங்காய் / திருமாங்கல்ய நூல் / பாஷியம்

முகூர்த்த திருமாங்கல்ய நூல், முகூர்த்த தேங்காய், பாஷியம் மாப்பிள்ளை வீட்டார் வாங்குவது மரபு ஆயினும் யார் வாங்குவது என்பதை இரு விட்டாரும் முன்கூட்டி கலந்து பேசி வாங்கவும்.

## சேஷை அரிசி

சேஷை (பெரியவர்கள் அரிசியினால் வாழ்த்துவது) அரிசியை போதுமான அளவு தனியாக (புரோகிதர் தேவைக்குப் போக) எடுத்து வைக்கவும்.

## முகூர்த்த பானைகள்

தங்களின் சம்பிரதாயப்படி, தகுந்த அளவு, எண்ணிக்கையில் வாங்கவும் இது தொடர்பாக இரு வீட்டாரும் பேசி முடிவு செய்து பட்டியலிடவும்.

- மணல் 2 பாண்டு ( பானை நிறுத்த )

## காசி யாத்திரை

காசி யாத்திரை பழக்கம் உடையவர்கள் அதற்கான பொருட்களை பூஜை துவங்கும் முன் புரோகிதர் வசம் தரவும்

மாப்பிள்ளைக்கு பாத பூஜை செய்பவர் யார் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்கவும்.

பாத பூஜை செய்தவருக்கு மோதிரம் காசி யாத்திரையின் பொழுது அணிவிப்பதா அல்லது அக்னியில் பொறி இடும் பொழுது (பொறி மோதிரம்) அணிவிப்பதா என்பதை தீர்மானித்து புரோகிதர் வசம் முன் கூட்டி தெரிவிக்கவும்.

## மணப் பொங்கல் (5 இலை படையல்)

மணப் பந்தலில் பொங்கல் வைக்கும் பழக்கம் இருப்பின் தகுந்த ஏற்பாடு செய்யுவும்

- விரட்டி 21
- பானை 1 *அல்லது* 2



## காமாட்சி விளக்கு வலம் வருதல்

திருமண சடங்கில் முக்கியமான மாங்கல்யம் முடிச்சு போடும் பொழுது மணப் பெண்ணின் பின்னால் விளக்கு ஏற்றுபவரை முன்கூட்டி தீர்மானிக்கவும்.

தோழிப் பெண், தோழி மாப்பிள்ளை இருவரும் மணவறையில் திருமண தம்பதி அருகில் திருமண சடங்குகள் முடியும் வரையில் இருக்க வலியுறுத்தவும்.

## பாத பூஜை / கன்னிகாதானம்

தாய் தகப்பனார் தான் பாத பூஜை மற்றும் கன்னிகாதானம் செய்ய உரியவர்கள் ஆயினும் சில நேரங்களில் வேறு யாரேனும் பாத பூஜை, கன்னிகாதானம் செய்ய நேரிடின் முன்கூட்டியே தீர்மானிக்கவும்

## குல தெய்வம், கோத்திரம், மூதாதையர் பெயர், நட்சத்திரம்

மணமக்களின் தந்தை, பாட்டனார், முப்பாட்டனார் பெயர் தெரிந்து வைத்துக் கொள்ளவும்.

கோத்திரம் அறிந்து கொள்ளவும்.

மணப்பெண், மாப்பிள்ளை நட்சத்திரம், ராசி அறியவும். குல தெய்வத்தை அறியவும்.

## சம்பிரதாயம்

திருமணத்திற்கான சம்பிரதாயங்கள் கடைபிடிக்கப்பட்டாலூம் சிலருக்கு கூடு தலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். இது தொடர்பாக 1 மணி நேரம் முன்னதாக புரோகிதரிடம் தெரிவித்தால் நல்லது.

## நலுங்கு (அதிகாலையில் வைக்கப்படும் நலுங்கு)

திருமணத்திற்க்கு 2 மணி நேரம் முன்னதாக தலைக்கு எண்ணெய் நலுங்கு வைக்க வேண்டும்

## நேரம் தவறாமை

திருமண சடங்குகளை முகூர்த்த நேரத்திலேயே நிறைவு செய்ய புரோகிதருக்கு ஒத்தழைப்பு தரவும்

## முளைப்பாலிகை

திருமணத்திற்க்கு 3 நாட்கள் முன் 100 கிராம் நவதான்யம் வாங்கி ஊற வைத்து பின்னர் ஈரத் துணியில் கட்டி வைக்கவும்.

## மெட்டி

மெட்டியினை மணப்பெண்ணின் கால் விரலின் அளவுப்படி அதிக கவனம் செலுத்தி வாங்கவும் ( கனமாக இருப்பின் பெரிது படுத்த முடியாது ).

## பட்டம், வெள்ளி பூனூல்

பட்டம், பூனூல் உடையவர்கள் திருமணத்தின் பொழுது புரோகிதர் வசம் கூறி உரிய நேரத்தில் பட்டம் கட்டி வெள்ளி பூனூல் சாற்றவும்.

## தீபம் ஒளிர்விடல்

திருமன சடங்குகள் அனைத்தும் முடியும் வரை மங்களகரமாக தீபம் ஒளிர் விட வேண்டும்.

தேவையான அளவு நல்லெண்ணெய் மற்றும் ஒரு சுமங்கலி அல்லது வண்ணார் தேவை

எந்த நிலையிலும் தீபம் அணையாமல் பாதுகாக்கவும்.

நல்லெண்ணெய் – 2 கிலோ பிளாஸ்டிக் கேன்

## நாகவல்லி (தெலுங்கர்)

நாகவல்லி பொட்டு வழக்கம் இருப்பின் திருமணத்திகு ஒரு மாதம் முன்னர் புரோகிதர் வசம் அவசியம் தெரிவிக்கவும். இதனால் நேர மேலாண்மை செய்ய முடியும்.

## திரை வேஷ்டி (தெலுங்கர்)

8 முழம் சலவை செய்த வேஷ்டி தேவை.

## சிறிய நுகத்தடி, நெல் விறைக்கோட்டை (கணக்கப்பிள்ளை)

திருமண மண்டபத்தில் நுகத்தடி உள்ளதா? ஊஞ்சல் உள்ளதா? என்பதை அறிந்து முன்ஏற்பாடு செய்யவும்.

நெல்விறைக் கோட்டைக்கு வைக்கோல் ஏற்பாடு செய்யவும்.

## தேவையான சில்லரை காசுகள்

ஒரு ரூபாய் நாணயம் – 21 எண்ணிக்கை

*பூஜை துவங்கும் முன்னர் புரோகிதர் வசம் தரவும்*



## உதவி

புரோகிதருக்கு தேவையான பொருட்களை ஒப்படைக்க மற்றும் இதர தேவைக்கு நெருக்கமான ஒருவரை அருகில் இருக்க சொல்லவும்.

## நேரம்

குறிப்பிட்டபடி துவங்க முழு ஒத்துழைப்பினை தரவும். நேரம் குறைவாக இருக்கும் நிலையில் ( சில நேரங்களில் ) வருகை தந்திருக்கும் அனைவரிடத்திலும் முகூர்த்த தாலி பொட்டு, முகூர்த்த தேங்காய் ஆசிர்வாதம் வாங்க இயலாமல் போகலாம். இதை கூடுமான வரை தவிர்க்க முயல்கிறேன்.

## புரோகிதர் ஏற்பாடுகள்

திருமண நேரத்திற்க்கு 11/2 மணி நேரம் முன் ஏற்பாடுகள் துவங்கும். அப்பொழுது பட்டியலில் உள்ள அனைத்து பொருட்களையும் புரோகிதர் வசம் தரவும்

## கத்திரிக்கோல் / பிளேடு

பொருட்களை பிரிக்கவும், பூச்சரத்தை கத்திரிக்கவும் தேவை

## முக்கியமானவர்கள்

திருமண நிகழ்ச்சியில் மிகவும் நெருங்கிய உறவினர்கள் மண்டபத்திலேயே இரவு தங்குவது நல்லது

## அன்பளிப்பு

அன்பளிப்புகளை எழுத 40 பக்கம் கோடு போட்ட நோட்டு, பேனா, துணி பை, ரப்பர் பேன்ட் மற்றும் பொறுப்பாளர்

## கை விசிறி

வியர்வையை தவிர்க்க கை விசிறி மணமக்களுக்கு தேவை

## சேவை குறைபாடுகள்

புரோகிதர் சேவையில் குறைபாடுகள் இருப்பின் தகுந்த நேரத்தில் சுட்டிகாட்டினால் சேவையினை மேம்படுத்த உதவும்

## வேண்டுகோள்

திருமண நிகழ்ச்சி அன்று காலையில் நல்ல நிலையில் மீதம் உள்ள உணவு பொருட்களை அனாதை இல்லங்களுக்கு குறித்த நேரத்தில் தரலாம்

திருமணம் அன்று ஆதரவற்றோர், ஊனமுற்றோர், முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு ஒரு வேளை உணவிற்கு ஏற்பாடு செய்யலாம்

- குட் லைப் சென்டர், 12 லோகனாதன் தெரு,
  மேற்கு தாம்பரம், தொலைபேசி 2226 4151, 2264152

## பொருள் பாதுகாப்பு

விலை மதிப்புள்ள பொருள் அடங்கிய பெட்டிகளை சங்கிலி கொண்டு பூட்டு போடவும்,

ஒருவரை பொறுப்பாக அறையில் நியமிக்கவும்

இரவு முழுவதும் விடிய விடிய ஒருவர் விழித்து உடமைகள பாதுகாக்க ஏற்பாடு செய்யவும்

| புரோகிதர் தட்சனை |
|---|
| ரூபாய்………………….. |

## சாந்தி முகூர்த்தம் (கர்ப தானம்)

திருமணநாள் அன்று இரவு சாந்தி முகூர்த்தம் நடத்திட நல்ல நேரம்

இரவு……………………………. மணி மேல்……………………………. மணி முன்னதாக அறை பிரவேசம் மற்றும் தம்பதி கூடல் நன்று

| | | | |
|---|---|---|---|
| முகூ. தேதி | : | கிழமை : | |
| முகூ. நேரம் | : | | |
| மாங்கல்ய நேரம் | : | | |
| முகூ. மண்டபம் | : | | |



## முக்கிய தொலைபேசி எண்கள்

சம்மந்தி வீடு :

புரோகிதர் : 2226 1742 / 98 403 696 77

*பூஜைப்பொருட்கள் : சுந்தரம் ரெட்டியார் **2226 0321** PP

*முகூ. பானை - : நீலகண்டன் 94443 48535

*வாழை மரம் : குமார் **93822 04762**

நாதஸ்வரம்

புகைப்படம்

வீடியோ

ஷாமியானா

பூக்காரர்

சமையல் கலைஞர்

மின்சாரம்

போக்குவரத்து

அழகு ஒப்பனை

மண்டபம்

மெல்லிசை

பாலு. சரவணசர்மா
புரோகிதர்–ஜோதிடர்
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம் மேற்கு, சென்னை 600 045.
தொலைபேசி / நகலி : 2226 1742 , கைத்தொலைபேசி : 98403 69677
e.mail : prohithar@yahoo.com
**Web : www.prohithar.com**

Updated 25 July 2006

*தொலைபேசி எண்கள் நல்லெண்ண அடிப்படையில் மட்டும் தரப்பட்டுள்ளது. வணிக நோக்கம் இல்லை